[கலைஞர் மு. கருணாநிதி] [1996 ஜூலை 17

* நடப்பாண்டிற்குள் கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டுவர தீவிர ஏற்பாடு; (மேசையைத் தட்டும் ஒலி)

* ஏற்கெனவே உள்ள 169 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் போக, எஞ்சியுள்ள 218 ஊராட்சி ஒன்றியங்களில் படிப்படியாக வரும் மூன்றாண்டுகளில் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தொடங்க ஆணை; (மேசையைத் தட்டும் ஒலி)

* மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10,000 ஆக உயர்வு; (மேசையைத் தட்டும் ஒலி)

* டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறுத் திட்டத்தின் கீழ் உதவித் தொகை ரூ. 300-லிருந்து ரூ. 500 ஆக உயர்வு; (மேசையைத் தட்டும் ஒலி)

* குடும்பத் தலைவர் இறந்து போனால், அவர் குடும்பத்தினருக்குக் குடும்பத் துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூ. 5,000-லிருந்து ரூ. 7,500 ஆக உயர்வு; (மேசையைத் தட்டும் ஒலி)

* விபத்தில் உயிரிழப்போரின் குடும்பத்திற்கு விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூ. 10,000-லிருந்து ரூ. 15,000 ஆக உயர்வு; (மேசையைத் தட்டும் ஒலி)

* கடந்த ஆட்சி அளித்த முறைகேடான சலுகைகளினால் கிராமப்புறங்களுக்குத் தனியார் பேருந்துகள் செல்ல முடியாத நிலையை மாற்றிடச் சட்ட நிறைவேற்றம்; (மேசையைத் தட்டும் ஒலி)

* ஒப்பந்தப்புள்ளி (Tender) பெறுவதில் பெருகியிருந்த ஊழல்கள் ஒழிப்பு; (மேசையைத் தட்டும் ஒலி)

* அரசுக் கருவூலத்திற்கு வரவேண்டிய நிதி திசைமாறி எங்கோ சென்று கொண்டிருந்ததைத் திருப்பி, சில்லறை விற்பனை விலையை உயர்த்தாமலேயே, ஆண்டொன்றுக்கு ரூ. 75 கோடி அரசுக்கு வருவாய்